<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் நாள் சனிக் கிழமை.

<u>இடைநிலை மனு எண்.1/2020</u>

<u>இன்</u>

<u>அசல் வழக்கு எண்.480/2019</u>

<u>(பழைய அ.வ. எண்.101/2015)</u>

முகமது அலி ....மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

அகமது அலி ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 19.07.2023 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு. P.சிவசங்கரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>உத்தரவு</u>

தாவா சொத்தினை மனுதாரரின் அமைதியான அனுபவத்தில் எதிர்மனுதாரரோ அவரது வாரிசுகளோ, முகவரோ, ஆட்களோ, எக்காலத்திலும் இடைஞ்சல் செய்யாமல் இருக்க வேண்டி இம்மனுவின் மீது விசாரணை முடியும் வரை இடைக்கால தடையுத்தரவும், இவ்வழக்கின் விசாரணை முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளையும் உத்தரவாக வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39, விதி 1 & 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>

2) தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்றும், 23.12.2008 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் கீழ் அதன் முந்தைய உரிமையாளரான சையது இஸ்மாயில் என்பவரிடமிருந்து வாங்கியதாகவும், வாங்கிய நாள் முதல் இதுநாள் வரை அமைதியான அனுபவத்தில் இருந்து வருவதாகவும், வருவாய் துறையினரால் தனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், மொத்த அளவு S.F.No.232/1C26B ல் 5 சென்ட்

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.08.05 16:51:31 +0530

உள்ளது, அதில் வடக்கு பக்கம் 2 சென்ட் 09.06.2008 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்தின் கீழ் தனபால் வாங்கினார் என்றும், மீதமுள்ள தெற்கு பக்கம் 3 சென்ட் மேலே கூறியது போல் தன்னால் வாங்கப்பட்டது என்றும், தனது 3 சென்ட் இவ்வழக்கில் தாவா சொத்தாக விவரிக்கப்பட்டுள்ளது என்றும், தங்கள் சொத்துக்களை அனுபவிப்பதில் தனக்கும், தனபாலுக்கும் இடையே எந்த சர்ச்சையும் இல்லை என்றும், இந்நிலையில் பிரதிவாதி தனக்குப் போட்டியாக தாவா சொத்தை வாங்க முயன்றார் என்றும், ஆனால் தாவா சொத்தை தான் வாங்கியதால் இது தொடர்பாக தனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பகை ஏற்பட்டது என்றும், இந்நிலையில் 2011 ஆம் ஆண்டில் வாதி OS.எண்.215/2011 ல் தனக்கு எதிராக பொய்யான மற்றும் கட்டுக்கதைகளை கூறி ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், தனது விற்பனையாளர் இஸ்மாயில் மற்றும் சையத் ஆலம்கீர் ஆகியோர் வழக்கு S.F.No.232/1C26B ல் உள்ள சில பகுதிகள் தொடர்பாக நிரந்தரத் தடை உத்தரவுக்காகவும், மற்றொரு சொத்தை மறைமுகமான முறையில் வழக்கு S.F.No.232/1C26B ல் குறிப்பிடாமல் குறிப்பிட்டுள்ளனர் என்றும், அந்த வழக்கில் தானே ஈடுபட்டு வழக்கை நடத்தினேன் என்றும், OS.எண்.215/2011 ல் உள்ள 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மிக நீண்ட காலத்திற்கு முன்பே இறந்துவிட்டனர் என்றும், மேலும் இறந்த 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் சட்டப்பூர்வ வாரிசுகளை வேண்டுமென்றே இழுத்தடிக்க வேண்டும் என்ற தவறான நோக்கத்துடன் பிரதிவாதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், இந்நிலையில் 01.03.2015 அன்று தான் அதில் கட்டுமானம் செய்வதற்காக தாவா சொத்தை சுத்தம் செய்து கொண்டிருந்த போது, பிரதிவாதி தனது அமைதியான உடைமையை தடுக்க முயன்றார் என்றும், தாவா சொத்தின் இயற்பியல் அம்சங்களையும் எல்லைக் கோட்டையும் மாற்றியமைக்கும் நோக்கத்துடன் தாவா சொத்தின் மீது அத்துமீறி ஆக்கிரமிக்க முயற்சித்தார் என்றும், எனவே மனுதாரர் அமைதியான அனுபவத்தில் எதிர்மனுதாரரோ அவரது வாரிசுகளோ, முகவரோ, ஆட்களோ, எவ்விதத்திலும் எக்காலத்திலும், இடைஞ்சல் செய்யாமல் இருக்க வேண்டி இம்மனுவின் மீது விசாரணை முடியும் வரை இடைக்கால தடையுத்தரவும், இவ்வழக்கின் விசாரணை முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளையும் வழங்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.08.05 16:51:40 +0530

3) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் 16.08.2016 ம் தேதியன்று ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டுள்ளார்.

4. மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,

" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

<u>தீர்வு</u>

6) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கட்டினை பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்து பொருத்து விளம்புகைக்காகவும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர தடையுத்தரவு கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இதனை மறுத்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதி தனக்கு உரிமையில்லாத சொத்திற்கு ஆணையர் நியமனம் கேட்டிருப்பது சொல்லியிருப்பது விந்தையாக உள்ளது என்றும், தாவா சொத்து குறித்து ஏற்கனவே ஒரு வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்தும், தனது விற்பனையாளர் இஸ்மாயில் மற்றும் சையத் ஆலம்கீர் ஆகியோர் வழக்கு S.F.No.232/1C26B ல் உள்ள சில பகுதிகள் தொடர்பாக நிரந்தரத் தடை உத்தரவுக்காகவும், மற்றொரு சொத்தை மறைமுகமான முறையில் வழக்கு S.F.No.232/1C26B ல் குறிப்பிடாமல் குறிப்பிட்டுள்ளனர். அந்த வழக்கில் மனுதாரர்/பிரதிவாதியே ஈடுபட்டு வழக்கை நடத்தியதாகவும், OS.எண்.215/2011 ல் உள்ள 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மிக நீண்ட காலத்திற்கு முன்பே இறந்துவிட்டனர் என்றும், மேலும் இறந்த 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் சட்டப்பூர்வ வாரிசுகளை வேண்டுமென்றே இழுத்தடிக்க வேண்டும் என்று எதிர்மனுதாரர்/வாதி செயல்பட்டதாகவும், தாவா அசல் வழக்கானது 10.03.2015 ம் தேதியிலேயே தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலையில், இம்மனுவும் அன்றைய தேதியில் இருந்து இன்றைய நாள் வரை சுமார் 8 வருடம் 5 மாதங்கள் ஆகி நிலுவையில் இருந்து வரும் நிலையில் மனுதாரர் கூறியபடி எதிர்மனுதாரர் தாவா சொத்தை அனுபவிப்பதை இடையூறு செய்திருந்தால் மனுதாரர் முன்கூட்டியே இம்மனுவின் மீது போதிய அழுத்தம் செலுத்தி

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.08.05 16:51:50 +0530

உத்தரவு பெற்றிருக்க முடியும் என்றும், தற்போது அசல் வழக்கானது வழக்கு விசாரணைக்காக தயாராக உள்ள நிலையில் அசல் வழக்கிலும் இம்மனுவில் கோரிய பரிகாரம் கோரப்பட்டுள்ளதாலும் அசல் வழக்கில் இம்மனுவில் கோரிய பரிகாரம் குறித்தும் தீர்மானிக்க முடியும் என்பதாலும் மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய State of Uttar Pradesh – v – Ram Sukhi Devi, reported in (2005) 9 SCC 733 என்ற வழக்கில்,"By an interim order, a final relief cannot be granted. In other words no interim relief, which amounts to a final relief, should be granted at the initial stage." என்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Bank of Tokyo Mitusubishi Limited, Mumbai –Vs– Spartex Ceramics India Limited, Chennai and others reported in (2007) 3 MLJ 203 என்ற வழக்கில்," ...... in deciding interlocutory applications, the Court cannot grant the main relief sought for in the suit ast the interim stage which in other words, would tantamount to a pre–trial decree." என்றும் கூறியுள்ளதை கருத்தில் கொண்டு ஆராய்கையில், இவ்வழக்கில் மனுதாரர் தாவா சொத்து பொறுத்து எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரத்தையும் ஒரு பரிகாரமாக கோரியுள்ள நிலையில் மேற்படி முன்தீர்ப்புரைகள் இவ்வழக்கிற்கும் பொருந்தி வருவதாகவே இந்நீதிமன்றம் கருதியும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் அது வழக்கு விசாரணைக்கு முந்தைய தீர்ப்பாணையாக ஆகி வழக்கு விசாரணையை பாதிக்கும் என்று கருதியும் மேலும் அசல் வழக்கு விசாரணைக்காக தயாராக உள்ள நிலையில் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரத்தை அசல் வழக்கிலேயே வழக்கு விசாரணையின் மூலம் முழுவதுமாக தீர்மானிக்க முடியும் என்று கருதியும் இம்மனுவில் கண்டுள்ள சட்ட தகுதிகளுக்குள் (Merit) செல்லாமல் இம்மனுவை அனுமதிப்பது மேற்கண்ட முன்தீர்ப்புரையின் படி ஏற்கத்தக்கதல்ல என்று கருதி செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.08.05 16:52:31 +0530

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.08.05 16:52:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.08.05 16:52:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.